ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2133/65 - 2019 ජූලි මස 27 වැනි සෙනසුරාදා - 2019.07.27

*2133/65 ஆம் இலக்கம் - 2019 ஆம் ஆண்டு யூலை மாதம் 27 ஆந் திகதி சனிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## சனாதிபதியின் பிரகடனங்களும் பிறவும்

### அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் செய்யப்படும் கட்டளை

*1979 ஆம் ஆண்டின் 61 ஆம் இலக்க, அத்தியாவசிய பொதுமக்கள் சேவைச் சட்டம்*

முத்திரை

மைத்திரிபால சிறிசேன

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் சனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஆகிய நான், 1979 ஆம் ஆண்டின் 61 ஆம் இலக்க, அத்தியாவசிய பொதுமக்கள் சேவைச் சட்டத்தின் 02 ஆம் பிரிவின் மூலம் எனக்கு உரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பிரகாரம், இதன் கீழ் அட்டவணையில் தெளிவாகக் காட்டப்பட்டுள்ள சேவைகளை வழங்கலில் ஈடுபடும் எந்தவொரு அரச கூட்டுத்தாபனம் அல்லது அரச திணைக்களம் அல்லது உள்ளூராட்சி நிறுவனம் அல்லது கூட்டுறவுச் சங்கங்கள் அல்லது அவற்றின் கிளைகளால் வழங்கப்படும் சேவைகளின் அத்தியாவசியத் தன்மையைக் கவனத்தில் எடுத்தும், அந்தச் சேவைகள் மக்களின் வாழ்க்கைக்கு அத்தியாவசியமானது எனவும், அந்தச் சேவைகளை இடையூறு அல்லது தடை ஏற்படுத்தக்கூடியது என்பதனால் எந்தவொரு அரச கூட்டுத்தாபனம் அல்லது அரச திணைக்களம் அல்லது உள்ளூராட்சி நிறுவனம் அல்லது கூட்டுறவுச் சங்கங்கள் அல்லது அவற்றின் கிளைகளால் வழங்கப்படும் கீழே அட்டவணையில் குறித்துரைக்கப்பட்டுள்ள சேவைகளை மேற்குறிப்பிட்ட பிரிவின் கருமங்களுக்காக அத்தியாவசிய சேவைகளென இந்த ஆணையின் மூலம் பிரகடனம் செய்கின்றேன்.

இரண்டாயிரத்துப்பத்தொன்பதாம் ஆண்டு யூலை மாதம் 27 ஆந் திகதி கொழும்பில் ஒப்பமிடப்பட்டது.

அதியுத்தமனாரின் ஆணைப்படி,

உதய ஆர். செனெவிரத்ன,
சனாதிபதியின் செயலாளர்.

1A - G 29937 — 417 (2019/07)

*இவ் அதி விசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

**அட்டவணை**

1. பயணிகள் அல்லது பண்டங்களுக்கான அனைத்துப் பொதுப் போக்குவரத்துச் சேவைகளும் ;

2. மேற்குறித்த சேவைகளை வினைத்திறனுடன் தடையற்ற முறையில் நடத்திச் செல்வதற்கு அவசியமான புகையிரதப் பாதைகள் மூலம் போக்குவரத்துகளுக்கு புகையிரதத் திணைக்களத்தினால் கையாளப்படவேண்டிய பணிகள், புகையிரதங்கள் மற்றும் புகையிரதப் பாதைகளின் பராமரிப்பு மற்றும் உரிய பாதுகாப்பு வசதிகளை வழங்குவதற்குத் தேவையான உரிய சமிக்ஞைக் கட்டமைப்பு மற்றும் வழிநடத்தல்கள், நுழைவுச் சீட்டுக்களை வழங்குதல் உட்பட புகையிரதத் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட வேண்டிய எந்தவிதமான அனைத்துச் சேவைகளும் ;

3. மேற்குறித்த சேவைகளைக் கொண்டுநடத்தத் தேவையான சகல பணிகளையும் மற்றும் எந்தவிதமான உடலுழைப்புகளையும் வழங்குதலும்.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.